ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது
අංක 2345/48 – 2023 අගෝස්තු මස 16 වැනි බදාදා – 2023.08.16
2345/48 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

2019, யூன் மாதம் 19 ஆந் திகதிய 2128/15 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டின் 122 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித் துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக்காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக்கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : 4-3/ 6/ 2019/ HW/ 36.
பிரதேச செயலாளரின் இல. : DEV/LND/02/ACQUI/05-11.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, யூன் 21.

**அட்டவணை**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவில் இல. 449A, கடவெத்துவ மேற்கு கிராம அலுவலர் பிரிவில் பல்லெ அபரெக்க (ஹிகுருபத்தல) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2020.09.14 ஆந் திகதிய, மாற 2850 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்டுள்ள பின்வரும் பெயர், விஸ்தீரணத்தை கொண்ட காணித்துண்டின் எல்லைகள்:

01. **துண்டு இல. 3 - பதுவத்தை - விஸ்தீரணம் : 0.0010 ஹெக்டயார்**

வடக்கு மற்றும் கிழக்கு: துண்டு இல. 2; தெற்கு : சி. டி. ஏ. ராஜபுத்திர உரிமை கோரும் பதுவத்தை ; மேற்கு: சி. டி. ஏ. ராஜபுத்திர உரிமை கோரும் பதுவத்தை மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு இல. 2

EOG 08 - 0157